# ஹாலிஎல பிரதேச சபை
# பதுளை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மே 13 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மே 13 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 யூலை 19 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஹாலிஎல பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 8,255,542 தொகையான நீதிமன்றத் தண்டப் பண வருமானம், வருமானக் கடன்பட்டோரின் கீழ் கணக்கு வைக்கப்படாமையினால் நடைமுறைச் சொத்து அப்பெறுமானத்தினால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 4,471,416 தொகையான நீதிமன்றத் தண்டப் பண வருமானம், வருமானச் செலவினக் கணக்கில் ரூபா 19,541 எனக் கணக்கு வைக்கப்பட்ட காரணத்தினால் ஆண்டின் வருமானம் ரூபா 4,451,875 தொகை குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் ³அ´ பட்டோலையின் பிரகாரம் மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடமிருந்து சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் 04 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 48,297 தொகையான முற்பணம் நிதிப் பிரமாணம் 371 இன் பிரகாரம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(எ) இடம்மாறிச் சென்ற, சேவையை விட்டுச் சென்ற மற்றும் மரணித்த 14 ஊழியர்களிடமிருந்தும் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடவேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 166,323 தொகையான கடனை அறவீடு செய்வதற்கு தாபனவிதிக் கோவையின் XXIV ஆவது அத்தியாயத்தின் 1:6 மற்றும் 4 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 880 மற்றும் 2005 மார்ச் 24 ஆந் திகதிய ஊவா மாகாண பிரதம செயலாளரின் 2/மு/1 ஆம் இலக்க கடிதம் மற்றும் 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதி 180 இன் பிரகாரம் அரசாங்கத்தின் பணம், சொத்துக்களுக்கு பொறுப்பாக செயற்படுகின்ற, கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை உறுதிப்படுத்துகின்ற, காசோலைகளில் கையொப்பமிடுகின்ற சபையில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்பு பெறப்பட்டிருக்கவில்லை.

(ஐ) இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 1645 இன் பிரகாரம் சபைக்குரிய 05 வாகனங்களுக்காக சம்பவக் குறிப்புப் புத்தகம் பேணப்பட்டிராததுடன் நிதிப்பிரமாணம் 1646 இன் பிரகாரம் அந்த வாகனங்களுக்கான நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்த பொழிப்பு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்